සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය

සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උඌණ උපයෝජන රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

நிதி அமைச்சு

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

Ministry of Finance

State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development


| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல DSD/HO/MF/BR/05<br>My No | ඔබේ අංකය<br>உமது இல ..........<br>Your No | දිනය<br>திகதி 2020.12.21<br>Date |

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள் மற்றும்
சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையார்கள் ஆகியோருக்கு

## <u>2021ம் ஆண்டின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவினை புதுப்பித்தல், வருடாந்த பொதுக்கூட்டத்தினை நடாத்துதல் மற்றும் உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தொடர்பில்</u>

வருடாந்தம் சமுர்த்தி வங்கிகளினதும், வங்கிச் சங்கங்களினதும் பதிவியினை புதுப்பிப்பது தொடர்பிலான ஆலோசனைகள் வழங்கப்பட்ட மேற்படி சம இலக்கத்தினையுடைய 2019.10.11ம் திகதியிடப்பட்ட கடிதம் தொடர்பில். அக்கடிதத்தின் மூலம் 2020ம் ஆண்டிற்குறிய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவினை புதப்பிப்பதற்குறிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2. 2017 மார்ச் மாதம் 07ம் திகதி வெளியிட்ட 2009/08 என்ற இக்கத்தினையுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி கட்டளைகளுக்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்கள் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31ம் திகதிக்கு 30 நாட்களுக்கு முன்னர் (கட்டளை இலக்கம் 5(6) இன் கீழ்) விண்ணப்பப்படிவம் ஒன்றினை சமர்ப்பித்து பதிவுனை புதுப்பித்தல் வேண்டும்.

3. அதன் பிரகாரம் தங்களால் 2021ம் ஆண்டின் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கத்தின் பதிவினை புதுப்பிக்கும் பொருட்டான விண்ணப்பப்படிவங்களை 2021 பெப்ரவரி மாதம் 10ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். <u>இப்பதிவினை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி, வங்கிச் சங்கங்களுக்குறிய கட்டளைகளுக்கமைய நடைபெறவேண்டிய சட்டரீதியான நடவடிக்கை ஒன்றாகும் என்பதனால் உரிய விண்ணப்பப்படிவங்களை பிழைகளின்றி குறித்த தினத்தில் சமர்ப்பிப்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.</u>

4. கடந்த வருடத்தினைப்போன்று சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் பதிவிற்குறிய தொகையினை (ரூபா 1000/=) சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் மூலம் சேகரித்து ஒரு காசோலை மூலமாக “முகாமையாளர் இலங்கை வங்கி, பத்தரமுல்லை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவின் முதலீட்டுக் கணக்கு” நடைமுறைக் கணக்கிலக்கம் 3417925இற்கு வரவாகின்ற பிரகாரம் வரைந்து 60 நாட்களுக்கு செல்லுபடியாகின்ற பிரகாரம் பதிவிட்டு பதிவிற்கான விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. பதிவினை புதுப்பிப்பதற்குறிய விண்ணப்பப்படிவத்தினை சமுதாய அடிப்படை அமைப்பின் தகவல்கள், பொதுக்கூட்டம், மற்றும் கட்டுப்பாட்டுச் சபையின் தகவல்கள், நிதி நிலை விபரங்கள் மற்றும் வருமானக் கூற்றுத் தகவல்களின் படிவங்கள் கடந்த வருடத்தின் படிவங்களேயாகும் என்பதுடன்


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

சமுதாய அடிப்படை அமைப்பின் தகவல்களை மீண்டும் சமர்ப்பிக்கும் போது திருத்திய தகவல்களை மாத்திரம் சமர்ப்பிப்பது போதுமானதாகும்.

6. சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கத்திற்கு கட்டுப்பாட்டுச் சபை மற்றும் நிறைவேற்றுக் குழுவினை நியமிக்கும் ஆலோசனைகள் ச/ச.அ/2017/06 என்ற இலக்கமும் 2017.03.17ம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரமே மேற்கொள்ளல் வேண்டும்.

7. கொவிட் - 19 தொற்று நிலையினடிப்படையில் சுகாதார ரீதியான எச்சரிக்கையுள்ள பிரதேசங்களில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் தெரிவு நடவடிக்கைகள் மற்றும் பொதுக்கூட்டத்தினை நடாத்தும் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் நடாத்துவதில் சிரமங்கள் உள்ளதனால் குறித்த சுகாதார ரீதியான எச்சரிக்கை நிலை குறையும் வரையில், தற்போதுள்ள கட்டுப்பாட்டுச் சபை மற்றும் நிறைவேற்றுக் குழு உத்தியோகத்தர்கள் ஊடாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

   வருடாந்த பொதுக்கூட்டம் மற்றும் தெரிவுகளை மேற்கொள்ளக்கூடிய பிரதேசங்களில் சுகாதார ஆலோசனைகளின் பிரகாரம் வழமைபோன்று உரிய கூட்டங்களை நடாத்தி புதிய உத்தியோகத்தர் குழாமை நியமித்துக்கொள்ளல் வேண்டும். இந்த வருடாந்த பொதுக்கூட்டத்தினை நடாத்தும் போது ஒருவருக்கு ஆகக்கூடியது ரூபா 300/= இற்கு உட்பட்டதாக உபசரணை செலவுகளையும் ஏனைய செலவுகளையும் செலவிட முடியும்.

8. மேலுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி, சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் 2021ம் ஆண்டிற்குறிய பதிவினைப் புதுபிக்கும் விண்ணப்பப்படிவத்தை சமர்பிக்குமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

9. இப்பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் ஏதும் விளக்கங்கள் தேவைப்படின் தொலைபேசி இலக்கம் 0112887469ஐத் தொடர்பு கொள்ளுமாறு மேலும் வினயமுடன் குறிப்பிடுகின்றேன்.

அர்.பீ.பி. திலக்கசிரி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர்- சமுர்த்தி, மனைப்பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. மாவட்டச் செயலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி-மாவட்டச் செயலகம் - த.கூ.க.பொருட்டும்
3. மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் - மாவட்டச் செயலகம் - அ.கொ.பொருட்டு
4. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - அ.கொ.பொருட்டு
5. பணிப்பாளர்கள் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - அ.கொ.பொருட்டு
6. பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலகம் - அ.கொ.பொருட்டு
7. பிரதிப் பணிப்பாளர்கள்/ உதவிப்பணிப்பாளர்கள்- மாவட்டச் செயலகம் - அ.கொ.பொருட்டு உ.ந.பொருட்டு
8. சட்ட உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - அ.கொ.பொருட்டு உ.ந.பொருட்டு
9. கௌரவ தலைவர், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கித் தொழிற்சங்கம் - த.கூ.க.பொருட்டு

Translated By:- M.M.M. Jawhar (Translator)